**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(மு.கூ.பொ)
ஜெயங்கொண்டம்

**2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27 ஆம் நாள் செவ்வாய்கிழமை**
**அசல் வழக்கு எண் – 57/2019**
**CNR No:TNAL05000085-2019**

1.முத்தாச்சி
2. சுந்தர்ராஜன்
3. வீரமணி
4. கலியபெருமாள் – வாதிகள்

/எதிர்/

1. செல்வம்
2. சக்கரவர்த்தி
3. வேணுகோபால்
4. கணேசன்
5. வேல்முருகன் – பிரதிவாதிகள்

தாவா சொத்தில் வாதிகளின் நிம்மதியான அனுபவத்தை பிரதிவாதிகளோ அல்லது அவரது ஆட்களோ, ஏஜெண்டுகளோ, எவ்விதத்திலும் இடைஞ்சல் செய்யாமல் இருக்க வேண்டி பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா செலவுத் தொகை வாதிகளுக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கவும், மற்றும் இவ்வழக்கின் தன்மைக்கேற்ப சமூகம் கோரட்டாரவர்களுக்கு தம்யுக்தமாய் கருதும் இதர நியாய பரிகாரங்கள் வழங்கி வாதிகளுக்கு சாதகமான தீர்ப்பும், தீர்ப்பாணையும் வழங்கிட வேண்டி பிரார்த்திக்கப்படுகிறது.

இவ்வழக்கானது 27.02.2024 அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்ததில், வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.S.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையாகியும்,2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 1 மற்றும் 5 ம் பிரதிவாதிகள் தோன்றா தரப்பினராக கருதப்பட்டும், 4 ம் பிரதிவாதி தள்ளுபடி செய்யப்பட்டும், வழக்கு கோப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

## தீர்ப்புரை

வாதி அழைத்தும் ஆஜரில்லை. வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். இறுதி வாய்தாவிலும் மற்றும் இந்த வாய்தாவிலும் விசாரணைக்காக பட்டியலிடப்பட்டிருந்தது. இந்நிலையில் வாதியின் வருகை அவசியமானது. வாதி தனது தரப்பு விசாரணையை தொடங்க முன்வரவில்லை. எனவே, நீதியின் நலன் கருதி இவ்வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2024–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.S.கணேஷ், M.Com., M.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ)
ஜெயங்கொண்டம்.

<u>வாதி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

–இல்லை–

<u>பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

–இல்லை–

ஒப்பம்/–திரு.S.கணேஷ், M.Com., M.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ)
ஜெயங்கொண்டம்.

------------------------------
முதன்மை மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், ஜெயங்கொண்டம்
அசல் வழக்கு எண்.57/2019
தீர்ப்புரை (நேரிய/வரைவு)
நாள்: 27.02.2024.
--------------------------